முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1157

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

29.11.2022, செவ்வாய்கிழமை

1. ஞான சூட்சுமமே அரங்கா வாழ்க
   ஞானிகள் பூஜை செய்யும் தேசிகா வாழ்க
   தான தர்ம சக்தி வழி நிலையை
   தரணியை மாற்ற அவதரித்த குருராஜா வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 13 ம் நாள் 29.11.2022, செவ்வாய்கிழமை)
   ஆசியதும் அரங்கன் சக்தியால்தான்
   அகிலத்தில் அற்புதம் நடக்க இருக்க
3. வாசிவென்ற ஞானிகளெல்லாம் இணைந்து அரங்கனோடு
   வள்ளல்தன்மை பெருக்கி உலகை காக்கஇருக்க
   இருக்கவே இந்த மாற்றத்தை
   இனிதே ஆறுமுகன் யான் நடத்துவேன்
4. கருத்தாக அரங்கன் திருவடி பற்றி
   கலியுகத்தார் கடைத்தேற்றம் வேண்டினால்
   வேண்டினால் வேண்டும் வரமாக இனிதே
   வேலவன் யான் அரங்கன் கரம் பட மக்களுக்கு
5. தொண்டுக்கும் அவர்கள் செய்கின்ற தர்மத்துக்கும்
   தேசிகன் வழி தீட்சையாக இறங்கி யான்
   யானுமே உலகோர்க்கு அற்புதம் நடத்துவேன்
   இனிதே இந்த மாற்றம் வழிதான் இணைந்து அரங்கன்வழி வருவதால்தான்
6. கனிவேலவன் என் தலைமைகொண்ட
   கலியுகத்தில் ஞான ஆட்சி ஞானிகள் ஆட்சி
   ஆட்சியதும் சடுதி காணக்கூடும்
   அரங்கனால் இந்த அற்புதம் நிகழும்
7. வரங்கள் பெற்று உலகோர் அன்னதனால்
   வணங்கி ஓங்காரக்குடில் நோக்கி வந்தால்
   வந்தால் தான் இந்த மாற்றம் சடுதி காணும்
   வழங்கிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–